
# ஞானக்கண்



ப்ரக்ஞன்

# ஞானக்கண்

ஆசிரியர்

**ப்ரக்ஞன்**

## நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | ஞானக்கண் |
| **ஆசிரியர்** | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| **வெளியீடு** | : | பராபரம் பாடசாலை |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2025 |
| **பக்கங்கள்** | : | 45 |
| **விலை** | : | அக விழிப்பு |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |

# ஞானக்கண்

## (Eye of Wisdom)

அத்யாத்ம ஞானக் கல்வியின் வரிசையில், பகவத்கீதை உபதேசிக்கும் மிக உயரிய தத்துவங்களின் அடிப்படையில், மனிதன் அடைய வேண்டிய **ஆத்ம ஞானம்** ஒன்று மட்டும்தான் அவனை அவனுக்கு யாரென்று காட்டிக் கொடுக்கும் என்பதினால், அத்தகைய அரிதான மிகப்பெரிய உண்மையை விசாரித்துப் பார்க்க, மனிதனிடம் காணப்படுகின்ற விழித்துக் கொண்ட விவேகம் மட்டுமே, **நன்மை – தீமை** மற்றும் **நித்தியம் – அநித்தியம்** ஆகிய இருமைகளைப் பற்றி ஆராய்கின்ற அற்புதமான பகுத்தறிவுப் பரிமாணத்தின் மிக உயரிய **ஆறாவது அறிவு** என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

அந்த வகையிலே, ஆறாம் அறிவின் விழிப்புணர்வு என்பது, நம்மை நமக்குக் காட்டிக் கொடுக்கின்ற பாதைகளான **சரியை, கிரியை, யோகம்** மற்றும் **ஞானம்** என்ற படி நிலைகளின் பயணத்தின் மூலம், மனிதன் புனிதனாக மாறி அடைகின்ற ஞானத்தைக் கொண்டு, பிறவாப் பெரு நிலையான **மோக்ஷம்** அல்லது **முக்தி** சித்தியாகும்.

பொதுவாக, மனிதர்களிடம் இருக்கின்ற புலன்களின் அடிப்படையில், நாம் அடைகின்ற அனுபவங்கள் அனைத்துமே அப்படியே சரி என்று கூறுகின்ற உண்மையாகி விடாது. காரணம், அவைகள் நமது புலன்களான கண்கள், காதுகள் மூலம் அறியப்படுவதால், அவைகள் நம்மை ஏமாற்றி விடும் வாய்ப்புகள் உள்ளது.

உதாரணமாக, கண்களால் பார்க்கப்படுகின்ற **கானல் நீர்** உண்மையில், அங்கே நீர் இருப்பதுப் போலக் காட்டுகின்றது. ஆனால், விசாரித்துப் பார்த்தால், அங்கே நீர் இல்லை.

உண்மையில், அது வெப்பச் சலனத்தால் உண்டான வெறும் காற்று மட்டுமே. ஆனால், நம் கண்களுக்கு அங்கு நீர் ஓடுவதுப் போல, ஒரு தோற்ற மாயையை உண்டு செய்கின்றது.

ஆகவே, **'உன் கண்ணை நம்பாதே! உன்னை ஏமாற்றும் நீ காணும் காட்சி!'** என்பது நன்கு புலனாகின்றது.

அவ்வாறே, ஒருவர் ஒரு வெள்ளை காக்கா பறப்பதைப் பார்த்தேன். அல்லது வெள்ளை நிறத்தில் ஒரு ஆவி நிற்பதைப் பார்த்தேன் என்று கூறுகின்றார்கள் என்றால், அதை அப்படியே நாம் நம்பி விடக்கூடாது.

அதன் உண்மைத் தன்மையை விசாரித்துப் பார்த்து, விழித்துக் கொண்ட விவேகத்தினால் விடைக் காண முயற்சிக்க வேண்டும்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. – திருக்குறள்.

ஆகவே, மனிதன் மட்டுமே, பகுத்தறிவுப் பரிமாணத்தில், விவேகத்தை அடைந்திருப்பதால், எது நித்தியம்? எது அநித்தியம்? என்பதை கட்டாயம் கண்டு பிடிக்க முடியும்.

மற்ற எந்த சீவர்களுக்கும் இந்த வாய்ப்பு கொடுக்கப்படவில்லை.

ஆக, இந்த பகுத்தறிவுப் பரிமாணம் மனிதனுக்கும் உடனே உண்டாவது கிடையாது. உதாரணமாக, ஆறாம் அறிவு படைத்தவன் மனிதன் என்றாலும், அவனது குழந்தைப் பருவம், இளமைப் பருவம் மற்றும் முதுமைப் பருவம் என எல்லோரும் ஒன்று போல சிந்திப்பதும் இல்லை. எல்லோரும் இந்த உலகத்தில் ஒரே மாதிரி உறவாடுவதும் இல்லை.

காரணம், அவரவர்கள் ஏற்கனவே ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களுக்கு ஏற்றவாறு, ஏற்றத்தாழ்வுகளுடன் கூடிய நிலையில், அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி காணப்படுகின்றார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி சிந்திக்கின்றார்கள், ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி செயல்களை செய்கின்றார்கள்.

இதிலிருந்து, **மனம் போல வாழ்வு!** மற்றும் **எண்ணம் போல வாழ்க்கை!** என்பதும் நமது நடைமுறையில் நன்றாகப் பார்க்க முடிகின்றது.

பொதுவாக, மனிதர்களிடம் காணப்படும் வெளியே பார்க்கின்ற புறப்புலன்களுக்கும், மனதிற்கும், அப்பாற்பட்ட **அக அறிவு** ஒன்று அனைவரிடமும் உள்ளேயே உள்ளது.

அதைத்தான் **மூன்றாவது கண், ஞானக் கண், பத்தாம் வாசல்** என்று ஞானிகள் கூறுகின்றார்கள். அதை **ப்ரஹ்ம ரந்திரம்** என்றும் அழைக் கின்றார்கள். அந்தக் கண் நமது நெற்றிப் பொட்டுக்கு நடுவே சற்று மேலே, உச்சந்தலையின் நடுமத்தியில் அரிசி அளவே உள்ளது.

அது நமது மூளையில் இருக்கும் **"பீனியல் சுரப்பி"** என்பதினால், இதுவே, இந்த உடலும், மனமும் இயங்குவதற்கான இன்றியமையாத உடல் உறுப்பு ஆகும்.

யாருக்கு இந்த பீனியல் சுரப்பி சரியாக இயங்குகின்றதோ? அவர்கள் தாங்கள் அடைந்த புத்தி சக்தியினால், விழித்துக் கொண்ட விவேகத்தினால், இந்த உலகத்துக்கு பல மகத்தான காரியங்களை செய்து காட்டுகின்றார்கள். அத்தகைய அரிதான வெளிப்பாடுகளை மெய்ஞான வழியிலும், விஞ்ஞான வழியிலும் என ஏராளமான கண்டு பிடிப்புகள் இந்த உலகத்தில் உபயோகமாக இவர்களால் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆக, அந்த மூன்றாவது கண் திறக்கின்ற வழி என்ன? என்பதுதான் எல்லோருக்கும் தெரிய வேண்டிய மிக முக்கியமான விசயம் ஆகும். இந்தக் கண் நம்மிடமுள்ள புறக் கண்களைப் போன்று, வெளியே தெரிகின்ற புறக் காட்சியின் பிம்பங்களைக் காணாது.

ஆனால், உடலின் உள்ளே இருந்துக் கொண்டு, இந்த உடலும், மனமும் இயங்கத் தேவையான அனைத்தையும் அறியும் அறிவைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். இந்த மூன்றாவதுக் கண் என்பது, உண்மையில் நம்மிடம் உள்ள பீனியல் உறுப்பாக இருந்தாலும், இந்த உறுப்பு செயல்பட வேண்டிய சக்தி, **சிதாகாசம்** என்ற அறிவு ஆகாசமாக இந்த உடலில் பட்டு பிரகாசிக்க தயாராக உள்ளது.

இது அனைத்தையும் அறியும் அறிவு எனும் மிக உயரிய வெட்டவெளியாகிய மகா ஆகாசம் எனும், அத்தனை ஆற்றல்களையும், அனேக வழிகளில் அறியக்கூடிய அருமையான **ஒரு ஆண்டெனா** போன்று இந்த பீனியல் சுரப்பி நம் உடலில் மையம் கொண்டுள்ளது.

இந்த பீனியல் சுரப்பியின் செயல்பாட்டின் காரணமாகவே ஒவ்வொரு மனிதனின் புத்தி சக்தியும், சிந்திக்கின்ற சிந்தனா சக்தியும் ஒருவருக்கு ஒருவர் வித்தியாசமாக மாறுபட்டு காணப்படுகின்றது.

இதன் செயல்திறன் மனிதனுக்கு மனிதன் மாறுபட்டுக் காணப்படுவதற்குக் காரணம், அவரவர்கள் ஏற்றி வைத்துக்கொண்ட எண்ணங்களின் அடிப்படையில் அமைகின்றது என்றால், அது மிகையாகாது.

ஆகவே, இங்கு **ஆறாம் அறிவு** என்ற பகுத்தறிவுப் பரிமாணத்தில் மனிதர்கள் உயர்ந்து வந்திருந்தாலும், இந்த மூன்றாவது கண் உள்ளிருந்து பல உண்மைகளை உணர்த்தும், நவீன விஞ்ஞானத்தின் மிக உயரிய ஒரு தகவல் தொழில் நுட்பத்தின் ஆண்டெனா போன்று, மெய்ஞானத்தின் '**அனைத்தையும் அறியும் அறிவு**' என்பதாக மனிதனிடம் மட்டுமே காணப் படுகின்றது.

பொதுவாக, மனிதர்கள் பல மகத்தான செயல்களை இந்த உலகத்துக்கு செய்ய வேண்டுமானால், இவர்கள் உள்ளேயுள்ள உள்ளத்தின் கண் எனும், இந்த **மூன்றாவது கண்** கொண்டே இந்த உலக வாழ்க்கையில் உயர்வை அடைய முடியும்.

ஆகவே, படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களின் உள்ளார்ந்த இயல்பு, அவைகள் எப்போதும், ஏதாவது ஒரு வேலையை செய்துக் கொண்டு இருப்பதும், ஒரு விநாடி நேரம் கூட செயலில்லாமல் சும்மா இருப்பதும் என்றுமே முடியாது என்பதினால், படைக்கப்பட்ட சீவர்களில் மனிதனும் அதற்கு விதி விலக்கல்ல.

ஆகவே, அந்த வகையிலே, மனிதன் தான் செய்கின்ற செயல்களையும், அதனால் உண்டாகின்ற செயல் விளைவுகளையும் எப்படி அணுக வேண்டும்? என்பதை எல்லோருக்கும் மிக எளிதாக பகவத்கீதை நமக்கு சுட்டிக் காட்டுவதை நாம் இங்கு விசாரித்துப் பார்க்க இருக்கின்றோம்.

ஸ்ரீபகவானுவாச |

லோகே ஸ்மின் த்விவிதா நிஷ்டா – புரா ப்ரோக்தா மயானக |

ஞானயோகேன ஸாங்யானாம் – கர்மயோகேன யோகினாம் || 3.3 ||

**பகவான் கூறினார்:**

ஓ பாவமற்றவனே, இந்த உலகத்தில் ஞானத்தை நோக்கி செல்லும் பாதைகள் இரண்டு உள்ளன. அவைகளை ஏற்கனவே என்னால் விளக்கப்பட்டுள்ளன:

எப்போதும், இறை சிந்தனையில் நாட்டங்கொண்ட அறிவின் பாதை என்ற ஒன்றும், எப்போதும் செயலில் நாட்டங்கொண்ட செயல்களின் பாதை என்ற மற்றொன்றும் உள்ளன.

ஆகவே, இவைகளை சரியாகப் புரிந்துக் கொண்டு, செயலில் செயலற்ற தன்மை எனும், கர்ம யோகத்தில் காரியங்களை செய்துக் கொண்டு, இந்த உலகத்துக்கு உபயோகமாக, உபகாரமாக வாழுகின்ற உத்தம ஞானியே மிகவும் மேலானவன்.

ந கர்மணா மனா ரம்பா – நைஷ்கர்ம்யம் புருஷோஸ்னுதே |

ந ச ஸன்ய ஸனாதேவ – ஸித்திம் ஸமதி கச்சதி || 3.4 ||

ஒருவர் செய்கின்ற செயல்களில் அல்லது வேலைகளில் இருந்து விலகி இருப்பதன் மூலம் மட்டுமே, கர்ம வினைகளிலிருந்து விடுதலைபெற முடியாது.

அவர்களது அறியாமையினால், உடல் அளவில் வேலை செய்யாமல் சும்மா உட்கார்ந்துக் கொண்டு, வெளியே உடைகளை மட்டும் காவி உடைகளாக மாற்றிக் கொண்டு, உள்ளத்தில் மாறாமல் உலகப் பற்றுகளை விடமுடியாமல் இருக்கின்ற போலி கபடதாரிகளால், இதுப்போன்ற புறத்திலே துறக்கின்ற துறப்பினால், அந்த தூய அறிவின் பரிபூரணத்தை அடைய முடியாது என்பதே இங்கு கீதை கூறவருகின்ற கருத்து.

ஆகவே, புறத்திலே உடமைகளை துறக்காமல், அகத்திலே உலகத்தை துறந்து, இந்த சமுதாயத்திற்கு உபயோகமாக வாழுகின்றவர்கள் மட்டுமே, பார்ப்பதற்கு வெளிப்புறமாக செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது போன்று காணப்பட்டாலும், அவர்கள் புறத்திலே உடைகளை துறந்தவர்களை விட அகத்திலே மிகவும் மேலானவர்கள் என்பதை இந்த பகவத்கீதை ஸ்லோகம் உபதேசிக்கின்றது.

இங்கு, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறவருவது என்னவெனில், ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட கடமைகளை, அவர்கள் சரியாகப் புரிந்துக் கொண்டு, செயல் விளைவுகளில் பற்று வைக்காமல், அனைத்து செயல்களையும், ஈஸ்வரக் காரியமாகவே செய்யும்போது, அது **கர்ம யோகம்** என்பதாக மாறுகின்றது என்றும், தனக்கான சுய விருப்பத்தின் காரணமாக, செய்யும் செயல்கள் எல்லாமே, '**நான், எனது**' என்ற தன் அபிமானத்தின் அடிப்படையில் அமைவதினால், அது கர்மா என்பதாக ஆகின்றது என்கின்றார்.

ஒருவன் விருப்பத்தின் அடிப்படையில் செய்யும் செயல்கள் ஒருபோதும், **கர்ம யோகம்** ஆகாது என்கின்றார்.

அதாவது, நெருப்பு புகையால் மூடப்படுவது போலவும், கண்ணாடி தூசியால் மூடப்படுவது போலவும், ஆசைகள் ஒருவரின் அறிவை மறைத்து, புத்தியை இழுத்துச் செல்கிறது.

ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனிடம், பாவத்தின் உருவகமான இந்த ஆசைகள் எனும் எதிரிகளைக் கொன்று, அவரது புலன்கள், மனம் மற்றும் புத்தியைக் கட்டுக்குள் கொண்டு வருமாறு அவருக்கு கூறுகிறார்.

ந ஹி கஸ்சித் க்ஷணமபி – ஜாது திஷ்டத்ய கர்மக்ருத்து |

கார்யதே ஹ்யவஸ: கர்ம – ஸர்வ: ப்ரக்ருதி ஜைர்குணை: || 3.5 ||

ஒரு கணம் கூட யாரும் செயல்களை செய்யாமல் இருக்க முடியாது. உண்மையில், அனைத்து உயிரினங்களும், ஜட இயற்கையில் (மூன்று குணங்கள்) பிறந்த தங்கள் குணங்களால், மூன்று விதமான செயற்பாட்டு முறைகளில் செயல்பட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

செயல் என்பது தொழில் சார்ந்த வேலையை மட்டுமே குறிக்கும் என்றும் உண்பது, குடிப்பது, உறங்குவது, விழிப்பது, சிந்திப்பது போன்ற அன்றாடச் செயல்பாடுகள் அல்ல என்று சிலர் நினைக்கிறார்கள். எனவே, அவர்கள் தங்கள் தொழிலைத் துறக்கும்போது, அவர்கள் செயல்களைச் செய்யவில்லை என்று நினைக்கிறார்கள். ஆனால், ஸ்ரீ கிருஷ்ணர் **உடல், மனம்,** மற்றும் **வாக்கால்** செய்யப்படும் அனைத்து செயல்களையும் செயல்களாக கருதுகிறார்.

எனவே, முழுமையான செயலற்ற தன்மை ஒரு கணம் கூட சாத்தியமற்றது என்று அர்ஜுனனிடம் கூறுகிறார். நாம் செயலற்று இருந்தாலும், அது ஒரு செயல்பாடு. நாம் படுத்திருந்தால், அதுவும் ஒரு செயல். நாம் தூங்கினால், மனம் இன்னும் கனவில் ஈடுபட்டுள்ளது. ஆழ்ந்த உறக்கத்தில் கூட, இதயம் மற்றும் பிற உடல் உறுப்புகள் செயல்படுகின்றன.

இவ்வாறு, ஸ்ரீ கிருஷ்ணர், மனிதர்களுக்கு, செயலற்ற நிலை அடைய முடியாத நிலை என்று அறிவிக்கிறார்.

ஏனெனில், **உடல் – மனம் – புத்தி** பொறி முறையானது. அதன் சொந்த மூன்று குணங்களின் (ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் – நன்மை, ஆர்வம், அறியாமை முறைகள்) வேலையை செய்ய நிர்பந்திக்கப்படுகிறது. ஸ்ரீமத் பாகவதத்தில் இதே போன்ற ஒரு வசனம் உள்ளது.

'யாரும் ஒரு கணம் கூட செயலற்று இருக்க முடியாது. ஒவ்வொருவரும் அவரவர் இயல்புக்கு ஏற்ப செயல்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.'

ஸ ஏவாயம் மயா தேத்ய – யோக: ப்ரோக்த: புராதன: |

பக்தோஸி மே ஸகா சேதி – ரஹஸ்யம் ஹ்யேத துத்தமம் || 4.3 ||

யோகத்தைப் பற்றிய அதே மிக உயர்ந்த ரகசியமான பண்டைய அறிவை இன்று நான் உனக்கு வெளிப்படுத்துகிறேன். ஏனென்றால், எனது நண்பன் மற்றும் பக்தனான உன்னால், இந்த ஆழ்நிலை ஞானத்தை நன்றாகப் புரிந்துக் கொள்ள முடியும்.

இங்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஆத்ம ஞானத்தை அளிக்கின்ற மிகவும் அரிதான அத்யாத்ம ஞானக் கல்வியைப் பற்றி பேசுகின்றார். இந்த கல்வியைக் கற்பதினால் உண்டாகும், மிக உயரிய விசயத்தை அடுத்த ஸ்லோகத்தில் தெளிவு படுத்துகின்றார்.

வீதராக பயக் ரோதா: – மன்மயா மாமு பாஸ்ரிதா: |

பஹவோ ஞான தபஸா – பூதா மத்பாவ மாகதா: || 4.10 ||

பற்று, பயம், கோபம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, என்னில் முழுமையாக மூழ்கி, என்னிடத்தில் அடைக்கலமாகி, என்னைப் பற்றிய அறிவால் தூய்மையடைந்து, அதனால் எனது தெய்வீக அன்பை அனேகரும் அடைந்துள்ளனர் என்கின்றார்.

இறைவன் என்பான் எல்லாம் அழியத் தான்மாத்திரம் அழியாது இருப்பவன்.

எங்கும் இருக்கும் அவன் எல்லார் உள்ளத்திலும் இருக்கின்றான்.

எப்படி இருக்கின்றான்?

எப்படி நாம் அதை அறிவது?

ஏன் அவன் இப்படி இருக்கின்றான்? என்றெல்லாம் பல கேள்விகள் எழுகின்றன.

அதற்கு விடையாக திருமூலர் பதில் கொடுக்கின்றார். அவரது பாடல்.

பிறந்தப் பாடலே கீழே வரும் அழகியப் பாடல்,

எல்லா வுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லாருக்கும் உய்யக்கொண்டு இங்கே அளித்தலாற்
சொல்லார்ந்த நற்குரு சுத்த சிவமே. – திருமந்திரம் 1576.

இறைவன் எல்லா உலகங்களுக்கும் அப்பாலாய் இருந்த போதிலும், இப்பாலாய் இந்த உயிர்கள் மேல் கொண்ட கருணையால், பல வடிவங்களை எடுத்து, சற்குண வடிவாக இந்த பிரபஞ்சம் முழுவதும் அவன் பலவாறாக நிறைந்திருந்தாலும், இந்த பூமியில் உள்ள உயிர்களுக்கு உபதேசிக்க விரும்பி, பாவங்கள் செய்யாது நல்லதாகிய புண்ணியங்கள் செய்வார் அகத்தே பல நலங்களை அருளி, சாதி மத வர்ண பேதங்கள் யாதுமின்றி எல்லாரும் வீடுபேறு உற்று பிறப்பறுத்து உய்ய இங்கே ஞானம் அருள்வதால், நல்ல ஞானமே தாங்கி வரும் நல்ல உபதேசங்களை கொடுக்கின்ற நற்குருவாக அந்த சுத்த சிவமே சற்குருவாக வெளிப்படுகின்றான் என்கின்றார்.

இங்கு நாம் கருதவேண்டியது '**நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்**' என்ற வரியே நல்லார் யார் என்ற கேள்வியை எழுப்புகின்றது. நல்ல குணங்களைக் கொண்டிருப்போர் என்றும் **அன்பு, தயை, காருண்யம்** போன்ற உயரிய குணங்களை உடையவர்கள் என்றும் கூறுவதிலிருந்து, இங்கு நாம் கவனிக்க வேண்டிய நல்லார் என்றால், உள்ளத்தில் தூய்மையை உணர்ந்தவர்கள் என்றே பார்க்க வேண்டும்.

இதிலே சிலர் மும்மலங்களாகிய **ஆணவம் கன்மம் மாயை** எனும் மலங்களால் சிக்குண்டு, பொல்லாத கொடூரமான வீழ்ச்சி வினைகளாக பிறருக்குத் துன்பம் தரும் செயல்களாக செய்கின்றார்களோ? அவர்கள் நிச்சயமாக நல்லார்களாக இருக்கமுடியாது.

இறைவன் **முப்புரம் எரித்தவன்** என்று புராணக் கதைகள் கூறுகின்றன. அந்த வகையிலே, அந்த முப்புரமாவது மும்மலக் காரியம் அல்லவா? என்றுதானே திருமூலர் கேட்கின்றார்.

யார் ஆணவமலத்தின் தாக்கத்தால் மற்றவர்களை துஷ்பிரயோகம் செய்துக் கொண்டு, சாதி என்றும், வர்ணம் என்றும், செல்வச் செழிப்பு என்றும், அதிகாரம் என்றும், சொல்லி, ஒரு சார் மக்களைக் கீழேத் தள்ளி, அவர்களது உரிமைகளைப் பறிக்கின்றார்களோ? அவர்கள் நிச்சயமாக நல்லார்களாக இருக்க முடியாது.

ஆகவே, இவர்கள் அகத்தே இறைவன் வெளிப்படாது இருந்தாலும், தூரமாகவே நின்று, அவர்களுக்கான தக்க தெய்வ வடிவங்கள் எடுத்து போதிக்காகாது விடமாட்டான். அந்த வகையிலே, அவர்களுக்கான காளி, கருப்பராயன் என ஏதாவது ஒரு வடிவத்தில் வந்து, அவர்களுக்கான பல அவதிகளைத் தரும் தீக்கைகளாகவே அவைகள் இருக்குமே தவிர, போதனைகளாக இருக்காது.

இதுவும் இறைவனது கருணைதான். இது அவனது மறக்கருணை. தீய வழியில் செல்வாரை அவர்கள் தீய வழியில் செல்கின்றார்கள் என்பதை

உணர்த்த, அவனது ஆற்றலே பலவாறு தீயவர்களாக மாறி, தண்டிப்பதும் இறைவனது கருணையே ஆகும்.

இங்குதான் "**எல்லாருக்கும் உய்யக்கொண்டு அளித்தலால்**" என்பது புரிகின்றது. இறைவன் அன்பே வடிவானவன்.

அவனுக்கு **வேண்டுதல் – வேண்டாமை** எனும் இருமைகள் எப்போதும் இல்லை.

நல்லோர் உளத்தில் அனுக்கமாக நின்றாலும், பொல்லார் உள்ளத்தில் அவன் இல்லாமல் இல்லை. அங்கும் தக்க வடிவில் எழுந்து நின்று, அவர்களுக்கான பாடங்களைப் பல தீக்கைகள் செய்வதின் வழி அவர்களைத் திருத்தி நல்வழிப் படுத்துவான்.

இவ்வாறு வேண்டுதல், வேண்டாமை இன்றி, சாதி, மத, வர்ண பேதங்கள் எல்லாம் பார்க்காது நல்லவரோ? தீயவரோ? அவர்கள் அனைவருக்கும் அவரவருக்கு ஏற்ற முறையில், ஏதாவது ஒரு வகையில் ஞானத்தை அளிப்பான்.

அத்தகைய சுத்த சிவனே நற்குரு என்பதோடு, உண்மையான சற்குருவும் அவரே ஆவார்.

அந்த வகையிலே நம்முடைய சனாதன தர்மத்தின் வழியில் வந்த சான்றோர்கள் பண்பாடு என்பது, இந்த உலகப் பண்பாடுகளில் ஓர் தனி சிறப்புடையது.

ஆகவே, பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நமது ரிஷிகளும், சித்தர் பெருமக்களும் கூறிய "**மெய்பொருள் காண்பது அறிவு**" என்றவாறு, இதையே ஞானக்கண் என்று கூறி, இத்தகைய வேதக் கல்வியான **அத்யாத்ம ஞானக் கல்வியைக்** கற்றலை மையமாகக் கொண்ட பண்பாடாகவே நமது பண்டைய பாரதம் விளங்கியது என பார்க்க முடிகின்றது.

இங்கு தான் பரமனைப் பற்றிய ஓர் அடிப்படை உண்மையும் சங்க காலத்திலிருந்து தெளிவாகியும் உள்ளது.

இந்த உலக இயக்கமே, இங்கு படைக்கப்பட்ட உயிரிகளின் வாழ்க்கையே ஆகும். அந்த வகையிலே, அவைகளுக்கு கொடுக்கப்பட்ட அறிவுப் பரிமாணங்களைக் கவனிக்கும் போது, அந்த தூய அறிவாகிய இறைவன் தன்னை இந்த உயிரினங்களில் படிப்படியாக வெளிப்படுத்துவதன் மூலமாக, தன்னையே அவைகளைக் கொண்டு அனுபவமாக்குகின்ற அருமையான அவனது திருவிளையாடல் என்பதையும் பார்க்க முடிகின்றது.

இங்கு படைக்கப்பட்ட பல்வேறு சீவராசிகளில், ஒரு அறிவு தாவரம் தொடங்கி, ஆறறிவு மனிதன் வரையிலும், உண்டான உள்ளம் மற்றும் உடல் சார்ந்த அனுபவங்கள் எனும்போது, அந்த அனுபவங்களின் நிறைவு என்பது, அவன் தன்னை உணருகின்ற போது, **நிறை நிலை மனிதன்** என்பதில் நிறைவகின்றது.

ஆக, இறைவன் ஒருவனே படைக்கப்பட்டவைகளில், அனைத்தையும் கற்றுக் கொள்பவனாகவும், அனைத்தையும் கற்றுக் கொடுப்பவனாகவும் இருக்கிறான்.

அதற்கான, ஒரு திருமந்திரப் பாடலைப் பார்க்கும்போது,

தேவனுஞ் சுத்த குருவும் உபாயத்துள்
யாவரையுங் மூன்றாய் உனக்கண்டு உரையாலே
மூவாப் பசு பாசம் மாற்றியே முத்திப்பால்
யாவையும் நல்குங் குருபரன் அன்புற்றே. – திருமந்திரம் 1577.

இறைவனே தேவனாகவும், சுத்த சற்குருவாகவும் இருந்து, அனைத்து உபாயங்களையும் உள்ளடக்கிய தூய அறிவாகவும் மாறி, அதிலே **பசு, பதி, பாசம்** என மூன்றாக வெளிப்பட்டு, பசுக்களாகிய சீவர்களின் மும்மலங்களை நீக்க,

அவைகள் மேல் கொண்ட அபரிமிதமான அன்பின் காரணமாக, முக்தியைக் கொடுக்கின்ற குருபரனாகவே வெளிப்படுகின்றான்.

ஆக, ஆழமான சைவ சிதாந்தத்தையே திருமூலர் இந்த நான்கு வரிகளில் அடக்கி விடுகிறார்.

இங்கு இறைவனே உயிர்கள் மேல் வைத்த அன்பால், அனைவருக்கும் குருபரனாக வருகின்றான்.

அவன் எப்படி போதிக்கின்றான்?

அவன் பயன்படுத்தும் உபாயங்கள்தான் என்ன?

இந்த உலகிலும் வாழ்கையிலும் பல்வேறு திருவிளையாடல்கள்.

இந்த திருவிளையாடல்கள் திருநடங்கள் நடக்காது உலகும் இல்லை உயிர்களின் வாழ்கையும் இல்லை.

ஆனால் இவைகள் எல்லாம் ஓர் கேளிக்கையாக பல இனியச் சுவைகளை இன்பங்களைத் தரும் லீலைகளா? இவையும் வேண்டும் ஆனால் அவ்றறிற்கு மேல் ஆழமாகச் சிந்திக்கத் தரும் உன்னமான பல திருவிளையாடல்களும் இருக்கின்றன.

இவைகள் இதே சீவர்களுக்கு துன்பங்களையு, வேதனைகளையும் தருவதாக இருக்கும். ஆனால், அத்தகைய வேதனைகள் அந்தந்த சீவர்களுக்கு அகத் தடைகளை மயக்கங்களை, சித்த மலங்களை, மாயைகளை எல்லாம் உடைத்து ஆழச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

இத்தகைய விரக்தி, வேதனை, துயரம், துக்கம் போன்றவைகள் ஒரு வழியாக ஒருவனை இன்ப மயக்கிலிருந்து விடுபட வைத்து, அவனைப்

பற்றியும், இந்த உலகத்தைப் பற்றியும், இதற்கு ஆதாரமான இறைவனைப் பற்றியும், இன்னும் ஆழமாகச் சிந்திக்க வைக்கின்றன.

இறைவன் கொடுக்கின்ற இவைகள்தான் உண்மையான தீட்சைகள் எனலாம்.

இதுவே '**உன கண்டு**' என்கின்றார் திருமூலர்.

ஆனால் காண்பது எது? மேலும் 'காண்பது" என்று ஏன் இதனைக் கூற வேண்டும்?

பார்வைகள் பல வகைப்படும்.

அவற்றைப் பொதுவாக ஊனக்கண் பார்வை என்று , ஐம்புலப் பார்வையையும், ஞானக்கண் பார்வை என்றும் வகுத்துள்ளனர் நம் முன்னோர்கள்.

பொருளுலகு முற்றிலும் காண் ஊனக்கண் பார்வை மாத்திரம் போதாது, ஞானக் கண் பார்வையும் வேண்டும். அப்படி ஊனக் கண் பார்வையோடு, ஞானக் கண்களையும் திறந்து ஞானக் கண் பார்வைகளை அருளி எல்லா பொருட்களையும் இறைவன் காண வைத்து, அதன் வழி **பதி பசு பாசம்** எனும் முப்பொருட்களை எஞ்சாது காண வைத்தும் அநாதி பொருளியலை எல்லா உயிர்களும் அறியும்படி போதிக்கின்றான்.

இதுவே '**யாவரையும் மூன்றாய் உனக் கண்டு**' எனதின் பொருள்.

இறைவனது போதனையாலேயே சீவர்கள் மனதை சுத்தமாக்கி, அபர வாழ்க்கைக் கழன்று பரவாழ்க்கைத் தொடங்கும் முமுட்சுவாக எழுந்து வீடுபேற்றைத் தவிர்த்து வேறொன்றும் வேண்டா உயர் நிலைக்குச் செல்வதே குருபரனாக இறைவனது போதனையால் மெய்யாகுவது.

இது இறைபோதனையால் மாத்திரம் மெய்யாகக் கூடியது என்றும் இங்கு திருமூலர் நன்கு உணர்ந்து அருளுகின்றார்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். – திருக்குறள்.

உண்மையில் கண் என்பது இத்தகைய அத்யாத்மக் கல்வி மட்டுமே, இந்தக் கல்வியைக் கற்காதவர்கள் முகத்தில் இரண்டு புண் உள்ளவர்கள் என்கின்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

ஆகவே, இந்த கல்வியைக் கற்பதின் வாயிலாக அடைகின்ற ஞானம் மட்டுமே உண்மையில் '**கண்**' எனப்படுகின்றது. இந்தக் கல்வி ஞானம் இல்லாதவர்கள் முகத்தில் இரண்டு புண்களைக் கொண்டவர்கள் என்பது தெளிவு.

நமது மூன்றாவதுக் கண் என்பது, கல்வி ஞானம் என்பதினால், இதைத் தவிர, வேறு எதை செய்தாலும் உண்மையானக் கண் திறக்காது. இந்த கண் திறப்பதினால் உண்டாகும் விழிப்புணர்வு மட்டுமே ஒருவனை உயர் பரிமாண அறிவு நிலையில், அனைத்தையும் அறியும் அறிவு என்பதாக எல்லாவற்றையும் காட்டிக் கொடுக்கும்.

இதனை நாம் வேதாந்த பாடங்களில் முப்புடி அல்லது திருபுடி என்று அழைப்போம்.

அதாவது, அறிபவன் – **அறிவு** – அறியப்படும் பொருள்
காண்பான் – **காட்சி** – காணப்படும் பொருள்
பார்ப்பான் – **பார்வை** – பார்க்கப்படும் பொருள்

என மூன்று மூன்றாகக் கொண்டு, கவனிக்கும் போது, கவனிப்பவன் – கவனம் – கவனிக்கப்படுபவைகள் என்ற விசயத்தில், கவனம் இல்லாவிட்டால், கவனிப்பவும் இல்லை, கவனிக்கப்படுபவைகளும் இல்லை.

அதாவது, ||**உறைநிலையில் உள்ள பனிக்கட்டியில் மறைந்துள்ள நீரைப்போன்றுப்ரஹ்மத்தி ,ன் சக்தி இவ்வாறு மறைந்துள்ளது .*||

இதை மறைந்திருப்பது எதுவோ,அதுவே ? மாயை எனப்படுகிறது .

**திருக்** – பார்ப்பவன்
**திருஷ்யம்** – பார்க்கப்படும் பொருள்

இந்த திருக் – திருஷ்ய விவேகம் பற்றி பகவான் ஸ்ரீசங்கரர் கூற வருவது என்னவெனில், நாம் காணும் இந்த பிரபஞ்சம் திருஷ்யம் என்றும், காண்பவனாகிய 'நான்' என்பவன் திருக் என்றும் கூறி, இதைப்பற்றிய ஒரு விளக்கத்தையே, "**திருக், திருஷ்ய விவேகம்**" என எடுத்துக்கூறுகிறார்.

இதைத்தான் பகவத்கீதை பேசும் போது, **க்ஷேத்திரம் – க்ஷேத்திரஞ்ஞன்** என்று விளக்கும். போகத்திற்கு உரியதான இந்தத் தேகம் **க்ஷேத்ரம்** என்றும், இந்த தேகத்தில் இருந்துக் கொண்டே இந்த தேகத்தை அன்னியமாக எது உணர்கின்றதோ? அதுவே, ஆத்மா.

அதனைத் தமது அனுபவத்தில் உணர்ந்த தத்துவ ஞானிகள் அந்த ஆத்மாவை **க்ஷேத்ரஞ்ஞன்** என்று பிரித்துச் சொல்வார்கள்.

அருச்சுனன் தன் எதிரில் நிற்பவர்களைப் பார்த்துக் கலங்குகிறான் என்று பார்த்தோம் அவன் பார்வையில் முதலாய்ப் .படுவது எது?

அவனது உறவினர்களின் உடலேபின்பே ., அவனுக்கு அவர்களின் உறவு முறை, அவர்களுடன் இருந்த போது செய்த செயல்கள், மற்றைய எண்ணத் தொகுப்புகள் எல்லாம் வரும் .

ஆகையால் அவைகள் அனைத்துக்கும் முதல் காரணம் அவன் தன்னை உடல் என்று குறுக்கிக் கொள்வதாலேயே என்று சொல்லலாம் அல்லவா?

**க்ஷேத்ரம்** என்றால் **விளைநிலம்** என்று ஒரு பொருள் .

விதையிலிருந்துதான் தாவரங்கள் முளைக்கின்றன என்றாலும், அவைகள் நன்கு செழித்து வளர வேண்டுமானால், அதற்கு நிலம் தேவைப்படுகிறது. அதுப்போல ஒருவனின் எண்ணங்கள் செயலாகப் பரிணமிக்க அவனுக்கு உடல் (தேகம்) தேவைப்படுகிறது.

எப்போது ஆசைகள், அபிலாஷைகள் எல்லாம் எண்ணங்களாக இருந்தும் ஏதோ சில காரணங்களினால், ஒரு காலத்தில் இந்த உடல் (தேகம்) இந்த உலகத்தை விட்டு மறைகிறதோ? அப்போது, அந்த மனதின் ஆசைகள் அல்லது அதன் எண்ணங்கள் செயல்பட, அதற்கான வேறு ஒரு உடல் (தேகம்) தேவைப்படுகின்றது என்பதுதான் நம் பாரதப் பண்பாட்டின் அடித்தளம்.

ஆக, தேகம் என்பதை விளைநிலம் என்று கொள்கிறோம். அந்த நிலத்தில் நமது எண்ணங்களாகிய விதைகளுக்கு ஏற்ப கிளைத்து எழுவதே நம் பாவப்– புண்ணியச் செயல்கள்.

அனுபவம் என்பது அனைவருக்கும் ஏற்பட ஒரு தேகம் வேண்டும். அதன் மூலம்தான் ஒருவன் தனது எண்ணங்களின் விளைவுகளை மேலும் கற்றுத் தெளிய முடியும். அந்தத் தேகத்தை எவன் பாவ – புண்யங்களின் விளை நிலமாக உணர்கிறானோ? அவன் **க்ஷேத்ரஞ்ஞன்** எனப்படுகிறான்.

தேகம் என்று ஒன்று உள்ளது என்பதை உணரும் க்ஷேத்ரஞ்ஞன் தான் **ஆத்மா** எனப்படுகிறது.

இங்கு அருச்சுனனின் கலக்கத்திற்கும், சோகத்திற்கும் காரணமாக இருப்பது உற்றார், சுற்றார் என்று காணும் அவனுடைய "**தனது, எனது**" என்ற மமகாரமே ஆகும்.

அதற்கும் மூல காரணமாக இருப்பது "**நான்**" எனும் அவனது அகங்காரமே ஆகும்.

வாழ்க்கையில் பல கஷ்டங்களை அனுபவித்தாயிற்று, அதற்கும் பின் நாம் போர்க்களத்திற்கு நம் இச்சையின்றியே இழுத்து வரப்பட்டிருக்கிறோம், போர் புரிவதே தனது கடமை என்று இல்லாமல், சுற்றிப் பார்த்து புலம்பும் அருச்சுனனின் கூர்மையான அறிவை அந்த மமகாரமே மழுங்கடித்துள்ளது.

இப்படி ஒன்றுக்கு ஒன்று காரணமாக இருப்பதைக் காட்டி, அவனது இருளான அஞ்ஞானத்தைப் போக்குவதற்காக பகவான் உண்மையில் உள்ளது எது? என்ற ஒளியான ஞானத்தைப் போதிக்க இப்படியாகத் தொடங்குகிறார்.

ஆக தேகம் வேறு ஆத்மா வேறு என்றில்லாமல், அவ்விரண்டையும் ஒன்றாகப் பாவித்து அருச்சுனன் இங்கு குழப்பத்தில் இருக்கிறான். இவைகளை எல்லாம் கற்று, அனுபவத்தில் நன்கு உணர்ந்த ஆன்றோர்கள் சொல்வதுப் போல அவைகள் இரண்டையும் அருச்சுனன் பிரித்துப் பார்த்திருந்தால், முன்னால் நிற்போர்களை தன்னிலும் வேறுபட்ட தேகங்களாகப் பார்க்காமல், அவர்களையும் அந்த ஒரே ஆத்மாவாகப் பார்த்திருப்பான்.

அப்போது, அவன் எந்தக் கலக்கமும் அடைந்திருக்க மாட்டான்.

*தேகம் வேறு, ஆத்மா வேறு என்று பகுத்து அறியும் அறிவே பகுத்தறிவு. அது அனைத்து சீவராசிகளையும் ஒன்றாகவே பார்க்க வைப்பதால், அது ஒரு புண்ணியச் செயல். அப்படியில்லாது இவர் வேறு, அவர் வேறு என்ற ரீதியில் நான்–நீ என்று பகுத்துக் காட்டும் அறிவு பகுத்தறிவு ஆகாது.*

*அப்படி பேதங்களைப் புகுத்தும் எதுவும் பாவச் செயல்களே.*

இங்கு நாம் காண வேண்டிய, கற்க வேண்டிய பாடங்கள் எல்லா வற்றிலும் இந்தத் தேகம் – ஆத்மா பற்றிய அறிவுதான் முதன்மையானது. இது ஒன்றே ஒருவனை நல்வழியில் கொண்டு செல்லும்.

இந்த ஞானம் உண்டாகாதவன் எதிலும் குழம்பித் தவிக்க வேண்டிய கட்டாயம் வரும். அருச்சுனனின் இப்போதைய நிலையும் அதுதான்.

அர்ஜுன உவாச |

ப்ரகிருதிம் புருஷம் சைவ – க்ஷேத்ரம் க்ஷேத்ரஞ்ஞமேவ ச |

ஏதத் வேதிது மிச்சாமி – ஞானம் ஞேயம் ச கேஸவ || 13.1 ||

அர்ஜுனன் கூறினார், 'ஓ கேசவ், ப்ரகிரிதி மற்றும் புருஷ் என்றால் என்ன? க்ஷேத்திரம் மற்றும் க்ஷேத்ரஜ்ஞன் என்றால் என்ன? என்பதை நான் புரிந்து கொள்ள விரும்புகிறேன். உண்மையான அறிவு என்ன? இந்த அறிவின் குறிக்கோள் என்ன என்பதை அறியவும் விரும்புகிறேன்.

ஸ்ரீபகவானுவாச |

இதம் ஸரீரம் கௌன்தேய – க்ஷேத்ரமித்ய பிதீயதே |

ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: – க்ஷேத்ரஞ்ஞ இதி தத்வித: || 13.2 ||

பகவான் கூறினார் :

ஓ அர்ஜுனா, இந்த உடல் க்ஷேத்ரம் (செயல்பாடுகளின் களம்) என்று அழைக்கப்படுகிறது. மேலும், இந்த உடலை உணர்கின்றது எதுவோ? அதுவே, க்ஷேத்ரஞ்ஞன் (களத்தை அறிந்தவன்) என்று இந்த இரண்டையும் பற்றிய உண்மையைக் கண்டறியும் உயரிய அறிவு மட்டும்தான் அனைவராலும் அறியப்பட வேண்டிய அவசியமான அறிவு என்று பண்டைய ரிஷிகள் கூறுகின்றார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணர் உடலுக்கும், ஆத்மாவிற்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் பற்றிய விவாதத்தைத் தொடங்குகிறார்.

ஆத்மா தெய்வீகமானது. ஆத்மாவால் சாப்பிடவோ, பார்க்கவோ, கேட்கவோ, சுவைக்கவோ, தொடவோ மற்றும் நுகர்வதற்கும் முடியாது.

மறைமுகமாக அது செயல்கள் செய்ய என அதற்கான வரையறுக்கப்பட்ட உடல், மனம் மற்றும் புத்தி எனும் கருவிகள் மூலம் இந்த அனைத்து செயல்களையும் செய்கிறது.

ஆத்மா எனும் உயிர் இந்த உடல், மனம் மற்றும் புத்தியின் அமைப்பிலிருந்து வேறுபட்டது. ஆனால், அது தனது தெய்வீக தன்மையை மறந்து, இந்த ஜட இருப்புகளுடன் தன்னை அடையாளப்படுத்துகிறது.

இருப்பினும். அது உடலைப் பற்றிய அறிவைக் கொண்டுள்ளது. எனவே, அது **க்ஷேத்ரஞ்ஞன்** (உடல் துறையை பற்றி அறிவுடையது) என்று அழைக்கப் படுகிறது.

இந்த க்ஷேத்திரத்தில் க்ஷேத்திரஞ்ஞனாக இருப்பவனே பிரபஞ்சத்தில் எங்கும், சர – அசர உயிர்கள் அனைத்திலும் பரவியுள்ள சொரூபமாக இருக்கிறான் என்று இங்கு கூறப்படுகிறது.

**"நான்"** என்னும் எண்ணம் வேறு, **"நான்–நான்"** என்னும் உணர்வு வேறு.

முன்னதை நாம் பொதுவாக நமது விழிப்பு நிலையில் அனுபவிப்போம். நமது அகந்தை அனுபவங்களும் அதனுடன் தொடர்பு கொண்டது தான். அதுதான் நம்மை படாத பாடு படுத்துகிறது. பின்னதாகிய **"நான்–நான்"** என்னும் உணர்வு நம்முடன் எந்த நிலையிலும் இருப்பது.

அந்த உணர்வை ஓரளவுக்கு இப்படி விளக்கலாம்.

வெகு காலம் முன்பு எப்போதோ எடுக்கப்பட்ட பழைய புகைப்படம் ஒன்றை ஒரு நாள் நாம் பார்க்கும் போது, **"நான் இப்படியா இருந்தேன்"** என்று எவருக்கும் தோன்றும் அல்லவா? அந்த எண்ணம் நமது உடலைப் பொறுத்ததே. உடலுக்கு ஒரு வளர்ச்சியோ, தளர்ச்சியோ உண்டு. அதன்படி புகைப்படமும் இருக்கும். அந்த புகைப்படம் எடுக்கப்பட்டபோது உங்களால் அந்தக் காலத்திய உணர்வை மீண்டும் அசை போட்டு, இப்போது எண்ணிப் பாருங்கள்.

அந்த புகைப்படம் எடுக்கப்பட்ட போது உங்களது உடல், மனம், மற்றும் ஏனைய எண்ணங்களைத் தவிர அப்போது "**நான்**" என்று இருந்த உங்கள் இருப்பாகிய உணர்வும் , இப்போது "**நான்**" என்ற உங்களது உணர்வும் வேறு வேறு என்றா உணர்கிறீர்கள்?

உங்களைப் பொறுத்தவரை "**நான்**" என்ற உணர்வு எந்த மாற்றமும் இல்லாது அப்படியேதானே இருக்கிறது?

உடல் வளர்ந்திருக்கலாம், தளர்ந்திருக்கலாம், மனமோ எண்ணங்களோ அடியோடு மாறியிருக்கலாம். ஆனாலும் "**நான்**" என்ற உணர்வு ஏதும் மாறாது அப்படியேதானே இருக்கிறது?

"**நான்–நான்**" என்ற அந்த உள்ளுணர்வைப் பிடித்துக் கொண்டு எப்போதும் இருக்கப் பாருங்கள். அதுதான் உங்கள் உண்மையான சொரூபம் என்றும், அதுவே உங்களைச் சுற்றியுள்ள அனைத்து சீவராசிகளின் உண்மையான சொரூபம் என்றும் காலப் போக்கில் உணர்வீர்கள்.

அதுதான் **க்ஷேத்திரஞ்ஞன்** என்று கூறப்படும் **ஆன்ம சொரூபம்** என்று சொல்லலாம்.

அதற்கு எல்லை இல்லை, காலமோ, தேசமோ எதுவும் இல்லை. சுருங்கச் சொன்னால் அது ஒன்றுதான் இருப்பது. அதை ஒருவன் அப்படி இருந்து தான் உணர முடியுமே தவிர யார், எவர் எப்படி விளக்கியும், சொல்லியும் அதை உணரவைக்க முடியாது. இதுதான் **ஜீவ–ஈஸ்வர ஐக்கியம்** அல்லது **அபேதம்** என்று கூறப்படுகிறது.

**மோக்ஷம், விடுதலை, வீடுபேறு** என்று விதவிதமாகச் சொல்லப் படுவதெல்லாம் அதை உணருவதில் தான் இருக்கிறது. அவன் அருளிருந்தால் அந்த உணர்ச்சி இங்கேயே, இப்போதே கைவரக் கூடும். ஏனென்றால் அதுவன்றி வேறு எதுவும் இல்லை.

அனைத்து உயிர்களின் தோற்ற, ஒடுக்கத்திற்கு ஈஸ்வர சொரூபமே காரணமாயிருந்தாலும், அது அந்த உயிர்களின் பேதங்களோடு ஒட்டாது, அவைகளின் இருப்பு மாத்திரமாகவே இருக்கும்.

அதனால், அதை அப்படி இருந்தே ஒருவன் உணர முடியும்.

இப்படியான தோற்றத்தின் காரணத்தினால் உயிர்களும், அவைகள் இருக்கும் உலகமும் ஜடமாக இல்லாது அவைகளின் மூலமாகிய சைதன்யம் என்பதாகவே கருதப்பட வேண்டும்.

தோற்றம் மட்டும் அல்லாது, அவைகள் இருப்பதற்கும், காலத்தில் மறைவதற்கும் என்றும் உள்ள அந்த மூல வஸ்துவே காரணமாக இருக்கிறது.

சகல உயிர்களும் ஆத்மாவில் இருந்து தோன்றி, அதிலேயே நிலைத்து, அதுவாகவே மறையும். ஆக அதுவன்றி வேறு எதுவும் இல்லை என்றாகிறது.

ஆக, "**அதுவே நான்**" என்கிறார் கிருஷ்ண பரமாத்மா.

அப்படியென்றால் உயிர்கள் வெவ்வேறாகத் தோன்றுவதன் காரணத்தை விளக்க அது மாயையினால் விளைந்தது என்றே கூறுவர். இருப்பது ஒன்றே, அதனால் இல்லாதது மாயை எனப்படுகிறது.

அதாவது கயிறு என்று தெரியும் வரை அதை பாம்பாக நாம் காண்பதையும், கானல் நீர் என்று உணரும் வரை, அதை நீர்த் தடாகம் என நாம் நினைப்பதையும் வேறு எப்படிச் சொல்லி அறிவுறுத்துவது?

ஆக, இத்தகைய அரிதான அறிவுரைகளை அளிக்கின்ற வேதங்கள் என்பது ஒரு சில புத்தகங்களின் பெயர்கள் மட்டுமல்ல. வேதங்கள் இறைவனின் **நித்திய அறிவு**. இறைவன் உலகைப் படைக்கும்பொழுது, ஆத்மாக்களின் நலனுக்காகவே வேதங்களை வெளிப்படுத்துகிறார்.

பிருஹதாரண்யக உபநிஷதம் (4.5.11) '**நிஹஸ்வஸ்தமஸ்ய வேதாஹா**' என்று விவரிக்கிறது,

அதாவது, வேதங்கள் இறைவனின் சுவாசத்தின் மூலம் தோன்றின.

முதலாவதாக, முதல் பிறந்த ப்ரஹ்மாவின் இதயத்தில் இறைவன் தனது அறிவை வெளிப்படுத்தினார். அங்கிருந்து ஸ்ருதி மரபில் பூமிக்கு வந்ததால், '**ஸ்ருதி**' என்ற மற்றொரு பெயரும், அதாவது '**கேட்டதால் பெற்ற அறிவு**' என்று வழங்கப்பட்டது.

கலியுகத்தின் தொடக்கத்தில், இறைவனின் அவதாரமான மகரிஷி வேதவியாஸர், வேதங்களுக்கு நூல்கள் வடிவத்தைக் கொடுத்து, ஞானத்தின் ஒரு கிளையை **ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம்** மற்றும் **அதர்வணவேதம்** என நான்கு பகுதிகளாகப் பிரித்தார்.

எனவே, அவர் **வேதவியாசர்** என்று அழைக்கப்பட்டார்.

அதாவது, '**வேதங்களைப் பிரித்து தொகுத்தவர்**' எனப்படுகின்றது. வேத வியாசரை வேதங்களின் ஆசிரியராக ஒருபொழுதும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், வேதங்களை தொகுத்து வழங்கியவர் என்று பெயரிடப்படுகிறார் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதனால்தான் வேதங்கள் **அபௌருஷேய** என்று அழைக்கப்படுகின்றன.

அதாவது '**எவராலும் இயற்றப்படவில்லை**'.

வேதங்கள் ஆன்மீக அறிவிற்கான தவறு இல்லாத அதிகாரமாக மதிக்கப்படுகிறது.

பூதம் பவ்யம் பவிஷ்யம் ச ஸ்ர்வம் வேதாத் பிரஸித்யதி

– (மனு ஸ்மிருதி1 12.97)

*'எந்தவொரு ஆன்மிகக் கொள்கையும் வேதங்களின் அதிகாரத்தில் சரிபார்க்கப்பட வேண்டும்.'*

வேதங்களின் இந்த அறிவை விரிவுபடுத்துவதற்காக, பல முனிவர்கள் நூல்களை எழுதினார்கள். மேலும் இவைகள் வேதங்களின் அதிகாரத்திற்கு இணங்குவதால், அவைகள் பாரம்பரியமாக வேதங்களின் வரம்பில் சேர்க்கப்பட்டன.

சில முக்கியமான வேத நூல்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

அவைகள் வரலாற்று நூல்கள். அவற்றின் எண்ணிக்கை இரண்டு. அவைகளில், ஒன்று **இராமாயணம்** மற்றொன்று **மகாபாரதம்**. இவைகள் கடவுளின் இரண்டு பெரிய அவதாரங்களின் வரலாற்றை விவரிக்கிறது.

ராமாயணம் வால்மீகி முனிவரால் இயற்றப்பட்டது மற்றும் ராமரின் பொழுது போக்குகளை விவரிக்கிறது.

வியக்கத்தக்க வகையில் பகவான் ஸ்ரீ ராமர் இந்த லீலைகளை நடத்துவதற்கு முன்பே வால்மீகியால் இந்த லீலைகள் எழுதப்பட்டது. மகரிஷி வால்மீகி தெய்வீக பார்வையின் அருளைப் பெற்றவர். இதன் மூலம் உலகில் பகவான் ஸ்ரீ ராமர் அவதாரம் செய்வதற்கு முன்பே பகவான் ஸ்ரீ ராமர் அவதார காலத்தில் நிகழப்போகும் பொழுது போக்குகளை முன்கூட்டியே அவரால் பார்க்க முடிந்தது. ராமாயணத்தின் மிக அழகாக இயற்றப்பட்ட இருபத்து நான்காயிரம் சமஸ்கிருத வசனங்களை எழுதினார். இந்த ஸ்லோகங்களில் மகன், சகோதரன், மனைவி, ராஜா மற்றும் திருமணமான தம்பதிகள் போன்ற பல்வேறு சமூகப் பாத்திரங்களுக்கான சிறந்த நடத்தையின் போதனைகளும் உள்ளன.

இராமாயணம் இந்தியாவின் பல பிராந்திய மொழிகளிலும் எழுதப்பட்டது,

இதன் காரணமாக மக்கள் மத்தியில் அதன் புகழ் அதிகரித்தது. பகவான் ஸ்ரீ ராமரின் சிறந்த பக்தரான புனித துளசிதாஸரால் எழுதப்பட்ட இந்தி ராமாயணம், **ராமசரித்மனாஸ்** இவைகளில் மிகவும் பிரபலமானது.

மகாபாரதம் வேத வியாசரால் எழுதப்பட்டது.

இது நூறாயிரக்கணக்கான வசனங்களைக் கொண்டுள்ளது மற்றும் உலகின் மிக நீண்ட கவிதையாகக் கருதப்படுகிறது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தெய்வீக லீலைகள் மகாபாரதத்தின் மையக் கருவாகும். இது மனித வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் கடமைகள் மற்றும் கடவுள் பக்தி தொடர்பான ஞானம் மற்றும் வழிகாட்டுதல் நிறைந்தது.

பகவத் கீதை மகாபாரதத்தின் ஒரு பகுதி. இது மிகவும் பிரபலமான இந்து வேதமாகும்.

ஏனெனில், இது ஆன்மீக அறிவின் சாராம்சத்தைக் கொண்டுள்ளது. இது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரால் மிகவும் அழகாக விவரிக்கப்பட்டுள்ளது. உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பகவத் கீதைக்கு எண்ணற்ற விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன.

அதுப்போலவே, வேத வியாசரால் எழுதப்பட்ட பதினெட்டு புராணங்கள் உள்ளன. அவைகள் நான்கு இலட்சம் வசனங்களைக் கொண்டிருக்கின்றன. இவைகள், கடவுள் மற்றும் அவரது பக்தர்களின் பல்வேறு வடிவங்களின் தெய்வீக பொழுது போக்குகளை விவரிக்கின்றன.

இவைகளில் தத்துவ ஞானமும் நிறைந்திருக்கின்றன. இவைகள் பிரபஞ்சத்தின் உருவாக்கம், நிலைநிறுத்தம், அழிவு மற்றும் அதன் மறு உருவாக்கம், தேவலோக தெய்வங்கள் மற்றும் புனித முனிவர்களின் வம்சாவளி ஆகியவற்றை விவரிக்கின்றன.

அவற்றுள் முக்கியமானவை முனிவர் வேத வியாசரால் கடைசியாக எழுதப்பட்ட பகவத் புராணம் அல்லது **ஸ்ரீமத் பாகவதம்** ஆகும். இந்த பாகவதத்தில் கடவுள் மீதான தூய்மையான தன்னலமற்ற அன்பின் உயர்ந்த தர்மத்தை வெளிப்படுத்தப் போவதாக அவர் குறிப்பிடுகிறார்.

தத்துவ ரீதியாக, பகவத் கீதை முடிவடையும் இடத்தில் **ஸ்ரீமத் பாகவதம்** தொடங்குகிறது.

வேத நூல்களின் அடுத்த முக்கியமான நூல்களாக ஆறு தரிசனங்கள் பார்க்கப்படுகின்றன. இவைகள் ஆறு ரிஷிகளால் இயற்றப்பட்ட ஆறு நூல்கள். இந்து தத்துவத்தின் குறிப்பிட்ட அம்சங்களை முன்னிலைப்படுத்தும் இவைகளை **"ஷட் தரிஷனம்"** அல்லது **'ஆறு தத்துவங்கள்'** எனப்படும்.

<u>அவைகள்:</u>

**மீமாம்ஸ:** ஜைமினி மகரிஷியால் இயற்றப்பட்ட இந்நூல் சமயச் சடங்குகள், கடமைகள் மற்றும் சடங்குகளை விவரிக்கிறது.

**நியாய தரிசனம்:** மகரிஷி கௌதமரால் எழுதப்பட்டது. இது வாழ்க்கையையும் முழுமையான உண்மையையும் புரிந்து கொள்வதற்கான தர்க்க அமைப்பை உருவாக்குகிறது.

**வைஷேஷிக் தரிசனம்:** மகரிஷி கானாட் எழுதியது. அதன் பல்வேறு கூறுகளின் கண்ணோட்டத்தில் அண்டவியல் மற்றும் படைப்பை பகுப்பாய்வு செய்கிறது

**யோக தரிசனம்:** மகரிஷி பதஞ்சலி எழுதிய இந்த தத்துவத்தில், உடல் யோகா ஆசனங்களுடன் தொடங்கி கடவுளுடன் இணைவதற்கான எட்டு மடங்கு பாதையை (அஷ்டாங்க யோகம்) விவரிக்கிறது.

**ஸாங்க்ய தரிசனம்:** மகரிஷி கபிலாரல் எழுதப்பட்டது. இது பொருள் ஆற்றலின் ஆதி வடிவமான ப்ரகிரிதியிலிருந்து பிரபஞ்சத்தின் பரிணாமத்தை விவரிக்கிறது.

**வேதாந்த தரிசனம்:** மகரிஷி வேத வியாஸரால் எழுதப்பட்டது. இது முழுமையான உண்மையின் தன்மையைப் பற்றி விவாதிக்கிறது.

மேலே குறிப்பிட்டுள்ள நூல்களைத் தவிர, இந்து மரபில் நூற்றுக் கணக்கான நூல்கள் உள்ளன. அவற்றையெல்லாம் இங்கு விவரிக்க இயலாது. சுருக்கமாக, வேத நூல்கள் மனிதகுலத்தின் தொடர்ச்சியான நலனுக்காக கடவுள் மற்றும் மகான்கள் வெளிப்படுத்திய தெய்வீக அறிவின் வற்றாத **பொக்கிஷங்கள்** என்று கூறலாம்.

மேலும், இந்திய நூல்களில், **ப்ரஹ்ம சூத்திரம்** (வேதாந்த தத்துவம்) ஆத்மா, உடல் மற்றும் பரமாத்மா ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடுகள் பற்றிய தலையாய கருத்துக்கள் இதிலே நிறைய உள்ளன.

வேதாந்த தர்ஸனம் வியாச முனிவரால் எழுதப்பட்டாலும், பல பெரிய அறிஞர்கள் அதை தத்துவ ஆய்வுக்கான ஆதாரமாக ஏற்றுக்கொண்டு, ஆத்மா மற்றும் கடவுளைப் பற்றிய அவர்களின் தனித்துவமான தத்துவக் கண்ணோட்டத்தை நிறுவுவதற்கு வர்ணனைகளை எழுதினார்கள்.

வேதாந்த தர்சனம் பற்றிய ஜகத்குரு சங்கராச்சாரியாரின் வர்ணனை **சாரீரக் பாஷ்ய** என்று அழைக்கப்படுகிறது. இது இருமையற்ற (அத்வைதவாத) தத்துவ பாரம்பரியத்தின் அடித்தளத்தை அமைக்கிறது.

வாசஸ்பதி, பத்மபாத போன்ற இவரைப் பின்பற்றுபவர்கள் பலர் அதற்குத் தங்கள் விளக்கங்களை விரிவாக எழுதியுள்ளனர்.

ஜகத்குரு நிம்பர்கார்ச்சார்யா இருமை சார்ந்த மற்றும் இருமை அற்ற (த்வைத –அத்வைதவாதம்) சிந்தனைப் பள்ளியை விளக்கும் **வேதாந்த பாஜாத சௌரப்** என்ற நூலை எழுதினார்.

ஜகத்குரு ராமானுஜாச்சார்யாவின் வர்ணனை ஸ்ரீ பாஷ்யம் என்று அழைக்கப்படுகிறது, இது தத்துவத்தின் விஷிஷ்ட– அத்வைத – வாத அமைப்புக்கு அடிப்படையாக அமைகிறது.

ஜகத்குரு மத்வாச்சார்யாவின் வர்ணனை **ப்ரஹ்ம ஸுத்ர பாஷ்யம்** என்று அழைக்கப்படுகிறது.

இது சிந்தனை த்வைத – வாத பள்ளிக்கு அடித்தளமாக உள்ளது.

**மஹாபிரபு வல்லபாச்சார்யா** அணு பாஷ்யத்தை எழுதினார். அதில் அவர் சுத்த த்வைத – வாதம் தத்துவ அமைப்பை நிறுவினார்.

இவர்களைத் தவிர, வேறு சில நன்கு அறியப்பட்ட வர்ணனையாளர்கள் பட் பாஸ்கர், யாதவ் பிரகாஷ், கேசவ், நீலகாந்த், விக்னனாபிக்ஷு, மற்றும் பலதேவ் வித்யாபுக்ஷு ஆகியோர் ஆவர்.

சைதன்ய மஹாபிரபு, ஒரு சிறந்த வேத அறிஞர், வேதாந்த தரிசனத்தைப் பற்றி எந்த விளக்கமும் எழுதவில்லை. வேதாந்தத்தின் எழுத்தாளர், முனிவர் வேத வியாஸர். அவர்களே, அவருடைய இறுதி நூலான ஸ்ரீமத் பாகவதம் அதன் சரியான வர்ணனை என்று அறிவித்தார்.

அர்தோயம் ப்ரஹ்மஸுத்ராணம் ஸர்வோபநிஷதாமபி

*'வேதாந்த தரிசனம் மற்றும் அனைத்து உபநிடதங்களின் அர்த்தத்தையும் சாரத்தையும் ஸ்ரீமத் பாகவதம் வெளிப்படுத்துகிறது.'*

எனவே, வேத வியாசரின் மீதுள்ள மரியாதையின் காரணமாக, சைதன்ய மஹாபிரபு வேதத்திற்கு மற்றொரு விளக்கத்தை எழுதுவது பொருத்தமாக கருதவில்லை.

ஆக, ஸ்ரீமத் பாகவதம் நூலின் ஆச்சாரியரான வேத வியாஸரின் பகவத்கீதை இன்னும் சில ஆழமான உண்மைகளை அடிமட்ட பாமர மக்களும் நன்றாக புரிந்துக் கொள்ளும் வகையில் உள்ளதால், அது, இந்த உலகத்துக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு உபதேசிப்பதுப் போன்று கொடுக்கப் பட்டிருப்பதால், அதன் மகத்துவம் அத்யாத்ம கல்வியின் ஆழமான செயலில் செயலற்ற தன்மையை எடுத்துக் கூறும் சில அரிதான உண்மைகளைப் பார்க்க முடிகின்றது.

கிம் கர்ம கிமகர் மேதி – கவயோப் யத்ர மோஹிதா: |

தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி – யஞ்ஞாத்வா மோக்ஷ்ய ஸேஷுபாத் || 4.16 ||

ஆக, இந்த கல்வியைக் கற்க வேண்டுமானால், அது ஒரு செயல் அல்லவா?

செயல் என்றால் என்ன?

செயலற்ற தன்மை என்றால் என்ன?

அர்ஜுனா! இதில் அறிவாளிகள் கூட இதைப்பற்றி தீர்மானிப்பதில் குழப்பம் அடைகிறார்கள். இப்போது நான் உனக்கு செயலின் ரகசியத்தை விளக்குகிறேன்.

அதை அறிவதன் மூலம் நீ உண்மையில் அடைய வேண்டியது எது? அதன் வாயிலாக உண்டாகும் உண்மையான விடுதலை எது?

இதனை உள்ளத்தில் உணர்வதன் வாயிலாக, புறப்பொருட்களின் பற்றுக்களிலிருந்தும் மனம் விடுபட்டு, அவைகளின் அடிமைத்தனத்திலிருந்தும் வெளியேறும்.

கர்மண்ய கர்ம ய: பஸ்யேத் – அகர்மணி ச கர்ம ய: |

ஸ புத்திமான் மனுஷ்யேஷு – ஸ யுக்த: க்ருத்ஸ்ன கர்மக்ருத் || 4.18 ||

செயலில் செயல் இன்மையையும், செயலின்மையில் செயலையும் பார்ப்பவர்கள் உண்மையிலேயே மனிதர்களில் ஞானமுள்ளவர்கள். எல்லா வகையான செயல்களையும் செய்தாலும், அவர்கள் யோகிகள் மற்றும் அவர்கள் எல்லா செயல்களிலும் வல்லவர்கள்.

செயலற்ற நிலையில் செயல்: தங்கள் சமூகக் கடமைகளை அலட்சியப் படுத்தி பாரமாக கருதி துறந்து விடுவது ஒருவகையான செயலற்ற தன்மை. இவ்வாறு உடல்ரீதியாக செயல்களை கைவிடும் போது அவர்களின் மனம் புலன்களின் பொருட்களை தொடர்ந்து சிந்திக்கிறது.

அத்தகைய நபர்கள் செயல் அற்றவராக தோன்றினாலும் அவர்கள் மந்தமான செயலற்ற நிலையில் இருப்பது உண்மையில் பாவச்செயலாகும். அர்ஜுனன் தனது போரைச் செய்ய வேண்டிய கடமையிலிருந்து விலகிச் செல்ல விரும்புவதாகக் கூறியபோது, ஸ்ரீ கிருஷ்ணர் அவ்வாறு செய்வது பாவம் என்றும், அத்தகைய செயலற்ற தன்மைக்காக அவர் நரகத்திற்கு செல்வார் என்றும் அவருக்கு விளக்கினார்.

செயலில் செயலற்ற தன்மை: கர்ம யோகிகள் செய்யும் மற்றொரு வகையான செயலற்ற தன்மை உள்ளது. அவர்கள் தங்கள் சமூகக் கடமைகளை முடிவுகளின் மீது பற்று இல்லாமல் செய்கிறார்கள், தங்கள் செயல்களின் பலனை கடவுளுக்கு அர்ப்பணிக்கிறார்கள்.

எல்லாவிதமான செயல்களிலும் ஈடுபட்டாலும், அவர்கள் கர்ம வினைகளில் சிக்குவதில்லை, ஏனெனில் அவர்களுக்கு தனிப்பட்ட இன்பத்திற்கான எந்த நோக்கமும் இல்லை. இந்திய வரலாற்றில் த்ருவ், ப்ரஹலாத், யுதிஷ்டிரர், ப்ருது, மற்றும் அம்பரீஷ் போன்ற பல சிறந்த மன்னர்கள் இருந்தனர்.

அவர்கள் தங்களின் அரச கடமைகளை சிறந்து ஆற்றினர். இருப்பினும், அவர்களின் மனம் பொருள் ஆசைகளில் சிக்காததால், அவர்களின் செயல்கள் செயலற்றவை அல்லது அகர்மம் என்று அழைக்கப்பட்டன.

அகர்மத்தின் மற்றொரு பெயர் கர்மயோகம்.

யஸ்ய ஸர்வே ஸமாரம்பா: – காம ஸங்கல்ப வர்ஜிதா: |

ஞானாக்னி தக்த கர்மாணம் – தமாஹுஹ் பண்டிதம் புதா: || 4.19 ||

யாரொருவர் செய்யும் செயலின் பலனாக, பொருள் ஆசையில் இருந்து விடுபட்டு, செய்யும் வேலையின் எதிர்வினையை தெய்வீக அறிவின் நெருப்பில் எரிக்கிறார்களோ அவர்களை ஞானிகள் என்று ஞானம் பெற்ற முனிவர்கள் கூறுகிறார்கள்.

உயிர், பேரின்பக் கடலாக இருக்கும் கடவுளின் ஒரு சிறு ஆற்றலாக இருப்பதால், இயற்கையாகவே அது ஆனந்தத்தைத் தேடுகிறது. இருப்பினும், இந்த உடல், மனம் தோஷம் காரணமாக பொருள்கள் மீது பற்று கொண்டு, அஞ்ஞானத்தால் மூடப்பட்டிருக்கிறது.

உயிர் இந்த உடலையும், மனதையும் 'நான்' என்று தவறாக பொருள் கொண்டு, அவைகளுடன் தன்னை அடையாளப்படுத்துகிறது.

இந்த அறியாமையில், அது ஜட உலகில் இருந்து பேரின்பத்தை அடைய இந்த உடலையும், மனதையும் கொண்டு செயல்களைச் செய்கிறது.

இந்த செயல்கள் சிற்றின்ப மற்றும் மன இன்பத்திற்கான விருப்பத்தால் தூண்டப்படுவதால், அவைகள் இந்த உயிரை கர்ம வினைகளில் பிணைக்கின்றன.

இதற்கு நேர்மாறாக, இதே உயிர் இந்த உடலையும், மனதையும் கொண்டு, இதுப்போன்ற அத்யாத்ம கல்வியின் வாயிலாக, ஆத்ம ஞானத்தை அடைந்துவிட்டால், அது தெய்வீக அறிவால் பிரகாசிக்கப்படுகின்றது.

இந்த உயிர் தேடும் பேரின்பம் புலன்களின் பொருள்களிலிருந்து அல்லாமல், மாறாக கடவுளுக்கு அன்பான சேவை செய்வதன் மூலம் அடையப்படும் என்பதை உணருகிறது.

அதன் பிறகு கடவுளின் மகிழ்ச்சிக்காக ஒவ்வொரு செயலையும் செய்ய முயல்கிறது.

*'நீ என்ன செய்தாலும் எதைச் சாப்பிட்டாலும் புனிதமான நெருப்புக்கு எதை காணிக்கையாக செலுத்தினாலும், அன்பளிப்பாக எதை வழங்கினாலும், என்ன தவம் செய்கிறாயோ ஓ குந்தியின் மகனே, அவற்றை எனக்கு பிரசாதமாக அர்பணம் செய்துவிடு'* என்றுதான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் வலியுறுத்துகின்றார்.

அத்தகைய அர்பணிப்பு ஞானம் அடைந்த இந்த உயிரானது, இந்த உலகப் பொருட்கள் மற்றும் அதன் விசய, சுகங்களில் சிக்காமல், சுயநலமான செயல்களையும் செய்யாமல், எல்லாவற்றையும் புரிந்துக் கொண்டு, இந்த மனம் மற்றும் உடல் வாயிலாக செய்கின்ற எல்லா செயல்களையும், இறைவனின் இன்பத்திற்காக அர்ப்பணிக்கும்போது, அத்தகைய செயல்கள் எதுவுமே, அந்த உயிருக்கு கர்மவினைகளை உண்டாக்குவதில்லை.

அந்த உயிர் அடைந்த ஆத்ம ஞான தீபத்தின் உதவியால், இந்த உடலையும், மனதையும் கொண்டு அடைந்த தெய்வீக அறிவின் அந்த நெருப்பில்

போட்டு அனைத்தையும் எரிக்கப்பட்டு விடுகின்றன. இதைத்தான் இங்கு கீதை வலியுறுத்துகின்றது.

த்யக்த்வா கர்ம பலா ஸங்கம் – நித்ய த்ருப்தோ நிராஸ்ரய: |

கர்மண்ய பிப்ரவ்ருத்தோபி – நைவ கின்சித் கரோதி ஸ: ||20||

இத்தகைய மக்கள், தங்கள் செயல்களின் பலன்களின் மீதான பற்றுதலைக் கைவிட்டு, எப்போதும் திருப்தியடைகிறார்கள். மற்றும் வெளிப்புற விஷயங்களைச் சார்ந்து இருக்க மாட்டார்கள். செயல்களில் ஈடுபட்டாலும், அவர்கள் எதையும் செய்வதில்லை.

செயல்களை வெளிப்புற தோற்றத்தால் வகைப்படுத்த முடியாது.

செயலற்ற தன்மை மற்றும் செயல் எது என்பதை மனதின் நிலையே தீர்மானிக்கிறது. ஞானம் பெற்றவர்களின் மனம் கடவுளில் லயிக்கப்படுகிறது. அவருடன் பக்தியுடன் இணைந்த முழு திருப்தியுடன், அவர்கள் கடவுளை தங்கள் ஒரே அடைக்கலமாக பார்க்கிறார்கள்.

மற்றும் எந்த வெளிப்புற ஆதரவையும் சார்ந்திருக்க மாட்டார்கள். இந்த மனநிலையில், அவர்களின் அனைத்து செயல்களும் அகர்ம் அல்லது செயலற்ற தன்மை என்று அழைக்கப்படுகின்றன.

இதை விளக்க புராணங்களில் ஒரு அழகான கதை உள்ளது:

பிருந்தாவனத்தில் கோபியர்கள் (மாடு மேய்க்கும் பெண்கள்) ஒருமுறை விரதம் இருந்தனர்.

நோன்பை முடிக்கும் சமயம் அவர்கள் ஒரு முனிவருக்கு உணவளிக்க வேண்டியிருந்தது. யமுனை நதியின் மறுகரையில் வசித்த உயர்ந்த

துறவியான துர்வாஸ முனிவருக்கு உணவளிக்குமாறு ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

கோபியர்கள் ஒரு சுவையான விருந்து தயார் செய்துவிட்டு கிளம்பினர் ஆனால் அன்று நதி மிகவும் கொந்தளிப்பாக இருந்ததைக் கண்டார்கள், படகோட்டிகள் யாரும் நதியை கடக்கத் தயாராக இல்லை.

கோ3பி1யர்கள் ஒரு தீர்வுக்காக ஸ்ரீ கிருஷ்ணரிடம் திரும்பினர். அவர் கோபியர்களை யமுனா நதி இடம் ஸ்ரீ கிருஷ்ணர் அகண்ட (நித்திய¬) ப்ரஹ்மசாரி என்றால், அது அவர்களுக்கு வழி கொடுக்க வேண்டும் என்று கூறச் சொன்னார்.

ஸ்ரீ கிருஷ்ணர் அகண்ட ப்ரஹ்மச்சாரியாக இருப்பதை சந்தேகித்து கோபியர்கள் சிரிக்கத் தொடங்கினர். இருப்பினும் ஸ்ரீ கிருஷ்ணர் ப்ரஹ்மசாரி என்றால் வழி கொடுக்க வேண்டும் நதியிடம் கூறியபோது நதி அவர்களுக்கு வழி கொடுத்தது அல்லாமல் ஆற்றின் நடுவில் அவர்கள் செல்வதற்கு மலர்களின் பாலம் வெளிப்பட்டது.

கோபியர்கள் வியந்தனர். அவர்கள் துர்வாஸ முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்று, அவருக்காகக் கொண்டு வந்த சுவையான உணவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டனர். ஒரு துறவியாக இருந்ததால், அவர் ஒரு சிறிய பகுதியை மட்டுமே சாப்பிட்டார்.

இது கோபியர்களை ஏமாற்றியது.

எனவே, துர்வாஸ முனிவர் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடிவு செய்தார், மேலும் தனது மாய சக்தியைப் பயன்படுத்தி, அவர்கள் கொண்டு வந்த அனைத்தையும் சாப்பிட்டார். அவர் இவ்வளவு சாப்பிடுவதைக் கண்டு கோபியர்கள் ஆச்சரியப்பட்டார்கள், ஆனால் அவர் தங்கள் சமையலுக்கு நியாயம் செய்ததில் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

அவர், 'இன்று துர்வாஸர் தூப்ப புல்லைத் தவிர (துர்வாஸர் உண்ணும் ஒருவகைப் புல்) எதையும் உண்ணவில்லை என்றால், நதி வழிவிட வேண்டும் என்று யமுனா நதிக்குச் சொல்லுங்கள்.' என்று கோபிகளிடம் கூறினார்.

துர்வாஸர் அனைத்து உணவையும் உட்கொண்டதை பார்த்த கோபியர் மீண்டும் சிரிக்கத் தொடங்கினர். ஆனால் அவர்கள் மிகவும் ஆச்சரியப்படும் வகையில் யமுனா நதியிடம் அவர்கள் மன்றாடியபோது நதி மீண்டும் அவர்களுக்கு வழி கொடுத்தது.

கோபியர்கள் ஸ்ரீ கிருஷ்ணரிடம் என்ன நடந்தது என்று கேட்டனர். கடவுளும் மஹான்களும் வெளிப்புறமாக ஜடச் செயல்களில் ஈடுபடுவதாகத் தோன்றினாலும், உள் வாரியாக அவர்கள் எப்பொழுதும் ஆழ்நிலையில் இருக்கிறார்கள் என்று அவர் விளக்கினார்.

இவ்வாறு, அனைத்து வகையான செயல்களைச் செய்தாலும், அவர்கள் இன்னும் செய்யாதவர்களாகவே கருதப்படுகிறார்கள். கோபி கோபியர்களுடன் வெளிப்புறமாக தொடர்பு கொண்டாலும், ஸ்ரீ கிருஷ்ணர் அகண்ட (நித்திய) ப்ரஹ்மச்சாரியாக இருந்தார்.

துர்வாஸர் கோபியர்கள் அளித்த சுவையான உணவை உண்டாலும், உள்ளத்தில் அவரது மனம் தூப்ப புல்லை மட்டுமே சுவைத்தது. இவைகள் இரண்டும் செயலில் செயலற்ற தன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

ஆகவே, செயலில் செயலற்ற தன்மை என்பது கர்மயோகம் என்பதாக ஆகின்றது. இதைப் புரிந்துக் கொண்டவன் எத்தகைய செயல்களை செய்தாலும், அந்த செயல்களின் செயல் விளைவுகளுக்கு உரிமை கொள்ள மாட்டான். அவைகள் அனைத்தையும் ஈஸ்வரக் காரியமாகவே பார்ப்பான்.

இத்தகைய ஞானம் உண்டாவது என்பது, அத்யாத்ம ஞானக் கல்வி மூலமாக உண்டாகும் என்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது.

நமது உடலுக்குக் கண் எப்படி மிக முக்கியமோ? அப்படித்தான் இந்த உயிருக்கு கல்விக் கண் மிக, மிக முக்கியம் என்கின்றது கீதை.

புறக் கண்ணில்லாதவன் இந்த உலகத்தில் இயல்பாக வாழ முடியாது. அதுப்போல, அத்யாத்ம ஞானக் கல்வி அறிவு இல்லாதவன் வாழ்வில் உயர்வு பெறமுடியாது.

ஆகவே, அத்தகைய உயரிய அத்யாத்ம ஞானக் கல்வியைப் பெறுவது என்பது, பல்வேறு பிறவிகளாக செய்த புண்ணியத்தின் பலனாகவே கைகூடும். அந்த வகையிலே, இறந்த காலம் என்னும் பெரிய திரையால் மறைந்து இருக்கின்ற எத்தனையோ ரிஷிகளின் உபதேசங்களையும், சித்தர்களின் சிறப்பான சித்தாந்தங்களையும், அவர்களது அருளாற்றல்களையும், இப்போது, நாம் அனைவரும் நிகழ் காலத்தில், இருந்த இடத்தில் இருந்துக்கொண்டே கற்பது என்ற முறையில், நமக்கான பூர்வ புண்ணியப் பலன் என்றே பார்க்க வேண்டும்.

கால, தேச நிலைகளைக் கடந்துள்ள பரம்பொருளையும், அபரோக்ஷ ஞானத்தினால், அவர்கள் அடைந்த அனுபவ உண்மைகளையும், இந்த உலகத்துக்கு உபதேச நூல்களின் வழியாக, நமக்கு உணர்த்த விரும்பிய உயரிய ரிஷிகள் நம் உள்ளத் தூய்மையைக் கொண்டே அவைகள் விளங்கும் என்றும் அறிவுறுத்துகின்றார்கள். அந்த வகையிலே, நமது மனத்தூய்மை ஒன்றே நமக்கான "**ஞானக்கண்**" திறக்கின்ற சாவி என்று கூறலாம்.

ஆகவே, இத்தகைய கல்வியைக் கற்க வேண்டுமானால், அதற்கான முதல் தகுதி அவன் மனிதனாக இருக்க வேண்டும். அடுத்து, அந்த மனிதனிலும், மனத்தூய்மை கொண்டவனாக இருக்க வேண்டும்.

இதைத்தவிர, பார்ப்பதற்கு மனித உருவத்தில் உள்ளவர்கள் எல்லாம், மனிதர்கள் ஆக மாட்டார்கள். மனிதன் என்பவன் மனதின் அடிப்படையில் ஆறாம் அறிவுப் பரிமாணத்தில், விழித்துக் கொண்ட விவேகத்தை அடைந்தால்

மட்டுமே, அதன் வாயிலாக அவன் அடைகின்ற அத்யாத்ம ஞானக் கல்வி, அவனை மனிதனில் புனிதனாக மாற்றுகின்றது.

இந்தக் கல்வியைக் கற்பதன் மூலம், அவனது அகம் (உள்ளம்) கற்பகக் கனியாகின்றது.

கல்வியின் சிறப்பால் உண்மை அறிவைப் பெற்றோர்க்கு இறைவன் கனி போன்று விளங்குவதால், **"கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி"** என்று பாடினார் சேந்தனார் பெருமான்.

**"கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி"** என்றார் அப்பர் பெருமான்.

இறைவன் வாலறிவன் என்பதால், அவன் நூலறிவு விளங்குபவரோடு தொடர்பு உள்ளவன் ஆகின்றான். "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்றார் திருஞானசம்பந்தர்.

**"கல்லார் மனத்துடன் நில்லா மனத்தவ"** என்றார் அருணகிரிநாதப் பெருமான்.

கற்ற அறிவாளருக்கு, முகத்தில் உள்ள ஊனக்கண்கள் மட்டும் அல்லாமல், உள்ளத்திலும் ஒரு ஞானக்கண் உண்டு. அந்தக் கண்ணே சிறப்புடையது என்கின்றனர் மகான்கள்.

அதையே நமது திருவள்ளுவப் பெருந்தகை கூறும்போது,

**"கண் உடையவர் என்போர் கற்றோர், முகத்து**
**இரண்டு புண் உடையவர் கல்லாதவர்"** என்கின்றார்.

இதையே, வேறு விதமாக, **"கற்றறிவாளர் கருத்தில் ஓர் கண் உண்டு"** என்றார் திருமூலர். இவ்வாறு, நம்முடைய கருத்தில் விளங்குகின்ற கண்ணே உண்மையில் **"ஞானக்கண்"** எனப்பட்டது.

இத்தகைய அரிதான உண்மை அறிவு விளக்கம் பெறுகின்ற தூய ஞானக் கல்வி அறிவை, ஒருவன் வாழ்நாள் முழுவதும் பெறாமலேயே கழித்து விடுதல் கூடாது.

கற்றது போதும் என்று நிற்கவும் கூடாது.

சாகும் வரை இதுப்போன்ற **அத்யாத்ம ஞானக்கல்வி** கற்காமல் இருப்பதும் கூடாது. சாகும் வரையிலும் தொடர்ந்து, இதுப்போன்ற கல்வியை கற்றும் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். நிறுத்தினால், மனம் மற்ற விசய, சுகங்களில் ஆர்வம் காட்ட ஆரம்பித்துவிடும்.

பொதுவாக மனதின் இயல்பு எதையாவது பற்றுவது மட்டுமே ஆகும்.

ஆகவே, விசய சுகங்களில் சிக்காமல், இதுப்போன்ற அத்யாத்ம ஞானக் கல்வியைக் கற்றுக் கொண்டும், கேட்டுக் கொண்டும் எப்போதும் இருக்க வேண்டும்.

"கற்றவனுக்குத் தனது நாடும், தனது ஊருமே அல்லாமல், மற்ற நாடும், ஊரும், தனது நாடும், ஊரும் போன்றவையே ஆகும். அப்படி இருக்க, ஒருவன் தான் இறக்கும் அளவும் கல்லாமல், தனது வாழ்நாளைக் கழிக்கின்றது என்ன நினைந்து?" என்று வினவுகின்றார் திருவள்ளுவர்.

சாகும் வரையிலும் கூட, கல்வியை ஒருவன் பயிலாது இருப்பது பெருமைக்கு உரியது அல்ல. கல்வி கரை இல்லாதது என்றதால், கல்வி கற்கத் தொடங்கிய ஒருவன், இதுப் போதும் என்று அமையாது, தனது வாழ்நாள் இறுதி வரையிலும் கற்றலை விடாது மேற்கொள்ள வேண்டும்.

"யாதானும் நாடு ஆமால், ஊர் ஆமால், என் ஒருவன்
சாம்துணையும் கல்லாத வாறு". – திருக்குறள்.

**"அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்"** என்பது வெற்றிவேற்கை.

ஆதலால் அறிவு உடைய ஒருவன், தான் செல்லுகின்ற இடந்தோறும் ஆங்காங்கே உள்ளோர்களால் வரவேற்கப்பட்டு வேண்டிய நலனை அடைவான். ஆதலால், அவர்கள் செல்லும் வழிக்குக் கட்டுச் சோறு வேண்டியது இல்லை.

ஆற்றவும் கற்றார் அறிவுடையார், அஃது உடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை – அந்நாடு
வேற்று நாடு ஆகா, தமவே ஆம், ஆயினால்
ஆற்று உணா வேண்டுவது இல். – பழமொழி நானூறு.

மிகுதியும் கற்கவேண்டிய நூல்களை அறிந்தவர்களே அறிவுடையார் ஆவார்கள். அத்தகைய அறிவினை உடையவர்களது புகழானது சென்று பரவாதே நாடே இல்லை ஆகும். கற்றவர்களுக்கு அந்த நாடுகள் வேற்று நாடு ஆவதும் இல்லை. எல்லா நாடுகளும் அவர்க்குச் சொந்த நாடே ஆகும்.

செல்வ வளத்தாலும், அதிகார பலத்தாலும், படை பலத்தாலும் மிகுந்து உள்ள அரசனைக் காட்டிலும், மனதில் மாசுக்கள் இல்லாத கற்றோரே சிறப்பு உடையவர்கள்.

காரணம், மன்னன் ஒருவனுக்குத் தனது நாட்டை விட்டுச் சென்றால் சிறப்பு இல்லை. அந்த நாட்டில் போய், **"நான் யார் தெரியுமா?"** என்று மார்தட்ட முடியாது.

ஆனால், கற்றறிந்த புலவருக்கோ, அவர்கள் செல்லுகின்ற நாடுகளில் எல்லாம் சிறப்பு உண்டாகும் என்கின்றார் ஔவைப் பிராட்டியார்.

மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர்தூக்கின்,
மன்னனில் கற்றோன் சிறப்பு உடையன் – மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பு இல்லை, கற்றோற்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு. – **மூதுரை.**

இத்தகு சிறப்பு வாய்ந்த ஆன்ம ஞானக் கல்வியே உயிருக்கு உற்ற துணையாக அமையும். வேறு துணை ஏதும் இல்லை என்கின்றார் குமரகுருபர அடிகள்.

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்இசையும் நாட்டும் – உறுங்கவல்ஒன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்குஇல்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை. – **நீதிநெறி விளக்கம்.**

அறமும், செல்வமும், இன்பமும் என்னும் மூன்று உறுதிப் பொருள்களையும், அவற்றுடன் வீடுபேற்றையும் கல்வியே கொடுக்கும். அது, உலகத்தில் குற்றமற்ற புகழையும் நிலை நிறுத்தும். கவலை ஒன்று நேர்ந்த பொழுதும் கைகொடுத்து உதவி செய்யும்.

ஆதலால் சிறிய உயிர்களாகிய மக்களுகுத் தக்க துணை இத்தகைய ஆத்ம ஞானக் கல்வியை விட வேறு ஒன்று இல்லை.

எனவே, **"கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்"** என்று திருஞானசம்பந்தரும், **"கல்லாதார் மனத்து அணுகாக் கடவுள், கற்றார்கள் உற்று ஒரும் காதலான்"** என்று அப்பர் பெருமானும் அருளியதை உணர்ந்து, இறைக் கல்வியைக் கற்று, இறைவனடியை அடைய முயல்வதே உயிருக்குச் சிறப்பைத் தரும்.

**"கல்லார் மனத்துடன் நில்லா மனத்தவ"** என்றார் அருணகிரி நாதப் பெருமான்.

**"கடவுள் நாமமே கற்றல் நல் தவமே"** என்றார் திருஞானசம்பந்தர்.

**"நாமம்"** என்பது புகழைக் குறிக்கும். அது இறைவன் பொருள்சேர் புகழ் ஆகும்.

இறைவன் புகழைக் கற்பதே தவம் ஆகும்.

கல்வியின் பயன் அதுவே என்பாதால், திருவள்ளுவர் மீண்டும் ஒரு குறளில் அந்த தூய அறிவை (ஆத்மாவை) அறியாதவன் வேறு எத்தகைய விசய, சுகங்களைத் தரும் உலகியல் கல்வியைக் கற்றாலும் இதன் பயன் என்ன? அவைகள் அவனுக்கு அமைதியையும், ஆனந்தத்தையும் ஒரு நாளும் தராது.

"கற்றதனால் ஆய பயன் என்கொல்? வால்அறிவன்
நல்தாள் தொழாஅர் எனின்." – என்கின்றார்.


ஆகவே, இதுப்போன்ற உயரிய அத்யாத்ம ஞானக் கல்வி மட்டுமே, அவனது அகக் கண் என்கின்ற மூன்றாவது கண் திறக்க வழி வகை செய்கின்றது. இதைத்தவிர வேறு எந்த ஒரு பயிற்சியினாலும், முயற்சியினாலும், **மூன்றாவது கண்** எனும் ஞானக் கண் திறக்காது.

ஆகவே, இதை நன்றாக உள்வாங்கி, வெளியே செல்லும் மனதை உள்ளே செலுத்தி, உயரிய அந்த தூய உணர்வை உணர்வது ஒன்றே மனித வாழ்வின் மகத்துவம் ஆகும்.

அதுவே ஞானம். அதுவே போதம், அதுவே வேதம்.

ஓம் தத் ஸத்!

# ஞானக்கண்



ப்ரக்ஞன்